2022 ஏப்ரல் 26]

மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை குறைகளையும் இந்த வாரத்திலேயே உடனடியாக ஆய்வு செய்து, அங்குள்ள மீனவர்களுக்கு நிவாரணம் தருகின்ற வகையிலே என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகள் எங்களுடைய துறையின்மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களுடைய உத்தரவின்பேரில் மேற்கொள்ளப்படுமென்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

நேரடி கொள்முதல் நிலையம்

***449—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை கிராமத்தில் தற்காலிகமாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. KMS 2021–2022–ல் சம்பா பருவத்திற்கு மரத்துறை கிராமத்தில் தற்காலிகமாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் கடந்த 4–2–2022 முதல் 7–3–2022 வரை செயல்பட்டது. இப்பருவத்தில் சுமார் 919 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 141 விவசாயிகளுக்கு ரூ.1,86,35,292 தொகை வழங்கப்பட்டு, விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 10–40

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நேரடி நெல் கொள்முதல் நிலையம் தொடர்ந்து இயங்கி வருகிறது. இடையறாது மழை பெய்கிற காலங்களில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட நெல்லை பாதுகாப்பான முறையில் அரிசி ஆலைகளுக்குக் கொண்டு செல்லக்கூடிய வகையில் எனது தொகுதியில் நிறைய இடங்களில் நிலையான கட்டடங்கள் தேவை என்பதைத்தான் நான் கேள்வியாகக் கேட்டிருந்தேன். அதிகமான நெல் கொள்முதல் செய்யப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பதில் தமிழகத்திற்கே ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. காரணம், நெல் உற்பத்தியிலும் சரி, நெல் கொள்முதலிலும் சரி, கடந்த காலங்களைவிட 30 சதவிகிதத்திற்கு அதிகமான அளவில் நெல் கொள்முதல் செய்த அரசு, நம்முடைய தமிழக அரசு. அது ஏதோ ஒரு நாள் நடந்த நிகழ்வல்ல, நான் அந்த மண்ணின் மைந்தன் என்ற காரணத்தால் சொல்கிறேன், ஜூன் 12 ஆம் தேதியன்று முறையாக மேட்டூர் அணையைத் திறக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, கோப்புகளைப் பார்த்தோம்,

2022 ஏப்ரல் 26]

கையெழுத்திட்டோம், நிதி ஒதுக்கினோம் என்று இல்லாமல், தூர் வாருகிற பணிக்கு, தமிழகத்தின் கடைக்கோடி பகுதிக்கும் சென்று ஆய்வு செய்து, முறையாக தமிழகத்தின் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, இவ்வளவு அரும்பாடுபட்டதன் விளைவாக இன்றைக்கு தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிக அளவில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்பது, திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் தேவைப்படுகின்ற 16 இடங்களில் நிலையான நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? நான் கேட்டிருக்கிற மரத்துறை, மயிலாடுதுறை மாவட்டத்தை ஒட்டிய பகுதி. எனவே, கடைக்கோடி பகுதியாக இருக்கிற திருவிடைமருதூருக்கு அவசியம் நிரந்தரக் கட்டடத்தைக் கட்டித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு* NABARD *வங்கியின்மூலமாக 100 இடங்களிலும், அதேபோன்று மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 50 இடங்களிலும், மொத்தம் 150 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இந்த ஆண்டில் கட்டுவதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுக்கு 16 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மாவட்ட ஆட்சியரிடத்தில் சென்று, அரசாங்கத்தின் இடங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றன என்பதை அறிந்து, துறைக்குத் தெரிவித்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளைப் பெற்று, கண்டிப்பாக அந்த*

இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல பதில் எங்கள் தொகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்று கூறி எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் புரட்சியில் புதிய அத்தியாயத்தை உருவாக்கி, முதலீட்டாளர்களின் முகவரி தமிழ்நாடு என்பதை மாற்றி, முதலீட்டாளர்களின் முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மண் சார்ந்த தொழில்கள் துவங்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். தஞ்சை மாவட்டத்தில் அதிகம் நெல் விளைகின்ற தொகுதி, என்னுடைய திருவிடைமருதூர் தொகுதி. நெல் உற்பத்தியிலும் அதிகம் இருக்கின்ற தொகுதி என்னுடைய திருவிடைமருதூர் தொகுதி. என்ன பொருள் எங்கு உற்பத்தி ஆகிறதோ, அவை சார்ந்த தொழில்கள் வரவேண்டும் என்கிற காரணத்தால், அங்கு உற்பத்தியாகிற நெல்லை, போக்குவரத்து வாகன செலவின்றி, நேரத்தின் அருமை கருதியும், துறை அதிகாரிகளின் அலுவலகப் பணிச் சுமையைக் குறைக்கும் விதத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசனை செய்து, என் தொகுதியில் நவீன அரிசி ஆலையினை அமைத்துத் தருவார்களேயானால், இவ்வளவு செலவினங்களைக் குறைத்து, அங்கு உற்பத்தி செய்கிற நெல்லை அங்கேயே அரிசியாக்கித் தருவோம் என்ற வகையில், அதனை நிறைவேற்றித் தருவார்களா என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடைமருதூர் தொகுதியில் மூன்று முறை மக்கள் என்னை அடையாளப்படுத்தி, உங்களை நம்பி வாக்களித்தார்கள். கேட்டதையெல்லாம் கொடுக்கிற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர், கேட்காததையும் தருகிற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர், வாக்களிக்காத மக்களுக்கும் நாம் ஏன் வாக்களிக்கவில்லை என்று எண்ணக்கூடிய அளவிற்கு

2022 ஏப்ரல் 26]

உழைக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சியில் நான் பணிவோடு கேட்பது, என்னுடைய தொகுதிக்கு நவீன அரிசி ஆலையை முதலமைச்சர் அவர்களின் கருணையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலேயே, தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 இடங்களில், தினந்தோறும் 500 மெட்ரிக் டன் அரைக்கின்ற விதத்தில்* PPP-Public Private Partnership *திட்டத்தில், 6 அரிசி ஆலைகள் நிறுவப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்கான பூர்வாங்கப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில்தான், பாதிக்கு மேலான விவசாய பெருமக்கள் இன்றைக்கு நெல் உற்பத்தி செய்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர் மற்றும் இன்னும் ஒரு மாவட்டத்திற்கு என மொத்தம் 6 இடங்களில் நவீன அரிசி ஆலைகள் நிறுவ இருக்கிறோம். கண்டிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அங்கு* PPP *திட்டத்தில் ஒரு நவீன அரிசி ஆலை நிறுவப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட தோப்பூர், ஆஸ்டின்பட்டி, மேலக்குயில்குடி ஆகிய கிராமங்களில் கொள்முதல் செய்யப்பட்ட; நெல்லை சேமிக்கும் இடங்களான கிட்டங்கிகள் 40–க்கும் மேற்பட்ட ஏக்கரில் திறந்தவெளி கிடங்குகளாக இருக்கின்றன. சுமார் 2 இலட்சம் டன் நெல் நீண்ட நாட்களாக அதே இடத்திலேயே திறந்தவெளியில் இருக்கிறது. அந்த மூன்று இடங்களிலும், குறிப்பாக பதம் கெடுவதற்கான*

சூழ்நிலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தோப்பூர், ஆஸ்டின்பட்டி, மேலக்குயில்குடி ஆகிய கிட்டங்கிகள் இருக்கிற இடங்களில் நிரந்தரக் கட்டடம் கட்டி, அதற்கான பாதுகாப்பு வசதிகளைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தோப்பூர் கிட்டங்கியை நான் மதுரை மாநகரத்திற்கு வருகிற சமயத்தில் பார்த்திருக்கிறேன். நேரடியாகச் சென்றும் பார்த்திருக்கிறேன். அங்கே திறந்தவெளி கிடங்காக இல்லாமல், சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சருடைய அரசு, கடந்த ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடத்திலிருந்து வாங்குகின்ற நெல்லை, நேராக அரவை ஆலைக்கு அனுப்பலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். இருந்தபோதிலும், ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று, கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண்மைத் துறையின் சார்பாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் பல்வேறு அரசுக் கட்டடங்கள் மற்றும் அங்கிருக்கின்ற சர்க்கரை ஆலைகளில் எல்லாம் நெல் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அங்கே கிட்டங்கி கட்டுவதற்கு வருகின்ற காலத்திலே துறையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர். வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுக்கோட்டை தொகுதியில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், கறம்பக்குடி தாலுகாவில் கரு. வடதெரு, மலையூர், கருப்பட்டிபட்டி, அதிரான்விடுதி, கரு. தெற்கு தெரு, முள்ளங்குறிச்சி ஆகிய இடங்களில் அரசு நேரடி*

2022 ஏப்ரல் 26]
நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது மாதிரிதான். மாண்புமிகு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு இடங்களிலே நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் தேவை என்று சொல்லியிருக்கிறார். நான் ஏற்கெனவே சொன்னபடி, 150 இடங்களிலே இந்த ஆண்டு கட்டவிருக்கிறோம். அவர் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்துபேசி, அரசாங்க இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், அதற்கு முன்னுரிமை கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சருடைய அரசால் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கிற நாதிபாளையம் ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட பெரியார் நகர் என்ற இடத்தில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாயில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு, 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அந்தக் கட்டடம் மூன்று மாத காலத்திற்கு முன்னால் திறக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக கொள்முதல் செய்கின்ற நெல்லை 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அந்தக் கிடங்கில் இருப்பு வைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கிறது. எனவே, இருப்பு வைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சரின் அரசு பொறுப்பேற்ற பின்புதான், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின் மூலமாக கட்டப்பட்ட கிட்டங்கி திறக்கப்பட்டு, காலியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். கண்டிப்பாக அந்த இடத்திலே நெல்லைக் கொண்டுபோய் சேமித்து வைப்பதற்கு துறையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G.V. *மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய டெல்டா பகுதி விவசாயிகளினுடைய இதயத்தில் பால் வார்த்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து இடங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்ததைப்போன்று, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம் ஆகிய தொகுதிகளில் 5 இலட்சம் ஏக்கர் மானாவாரி பகுதிகளில்* pulses, *உளுந்து, பாசிப்பயறு மற்றும்* small millets *அதிகமாக விளைகின்றன. ஆகவே, பருப்பு வகைகளை வாங்குவதற்கு நம்முடைய உணவுத் துறைமூலம் விளாத்திகுளம் தொகுதியில் கொள்முதல் நிலையம், திறக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி நெல் கொள்முதல் செய்வது குறித்தது. ஆனால், நீங்கள் பருப்பைக் கொள்முதல் செய்வீர்களா எனக் கேட்கிறீர்கள். மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறை இதுவரையில் நெல்லைதான் கொள்முதல் செய்கிறது. இப்பொழுது எங்கள் துறை உளுந்து மற்றும் சிறுதானியங்களையும் கொள்முதல் செய்யலாமா என்று ஆய்வு செய்து வருகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, வருகின்ற காலத்தில் துறை அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டு முடிக்கவும்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நெல் உற்பத்தியில் தஞ்சாவூர் மாவட்டம் முதலிடத்தில் இருந்தாலும்கூட, திருவண்ணாமலை மாவட்டம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தின் விவசாயிகளுடைய நலன் கருதி திருவண்ணாமலை மாவட்டத்தில், கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் மையங்களும், குறிப்பாக என்னுடைய போளூர் சட்டமன்றத் தொகுதியில், அத்திமூர், பெலாசூர், மண்டகளத்தூர் ஆகிய பகுதிகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் மையங்களையும் அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு உறுப்பினர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கேட்கிறாரா அல்லது சொந்தக் கட்டடம் கேட்கிறாரா என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, கூட்டுறவுத் துறை அரசாணை நிலை எண் 60–ல் ஏற்கெனவே விதிமுறைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்), கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர், விவசாய சங்கப் பிரதிநிதிகள் இரண்டு பேர், தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய R.M. அல்லது S.R.M. ஆகிய 7 பேர் கொண்ட குழு ஒவ்வொரு மாவட்டத்திலும், அமைக்கப்பட்டு அவர்கள் தலைமையிலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்புகொண்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

172—

தடுப்பணை

***11406—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, வடக்கு பொய்கைநல்லூர் கிராமம், பரவையாறு வடிகாலின் குறுக்கே புதிய படுகை அணை அமைக்க ரூ.780 இலட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நீர்வளத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.